**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

<table>
<tr><td colspan="4">2024-ம் ஆண்டு ஜீன் மாதம் 11-ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு 2-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண் 44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>அம்பலம்</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td>ஆதிமூலம்</td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**11.6.2024 OS.No. 7/2023 பி.வா.சா.2 அம்பலம் ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**:

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திற்கு யார் விபரம் சொன்னது என்றால் நான்தான் சொன்னேன். தாவா வழக்கு சொத்து தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் 209/2 மற்றும் 367/14 ஆகும். தாவா சொத்துக்கள் எங்கு உள்ளது என்றால் கீழராங்கியம் என்ற ஊரில் உள்ளது. அது மேலராங்கியம் குரூப் ஆகும். தாவா சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் ராமுத்தேவர் பெயரில் உள்ளது. எவ்வளவு நாளாக மேற்படி பட்டா உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.

2. தாவா சொத்து இன்று வரை ராமுத்தேவர்தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் செல்வியும், அவரது அப்பாவும் விவசாயம் செய்து வருகிறார்கள். என்ன விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் நஞ்சை பூமியில் நெல்விவசாயம் செய்து வந்தார்கள். புஞ்சையில் பருத்தி போன்ற பயர்கள் செய்து வந்தார்கள். கடந்த 15 வருடமாக கருவேலமரங்கள் முண்டிக்கிடக்கிறது. தாவா சொத்து ஆதிமுலத்தேவர் என்பவருக்கு பாத்தியம் என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

3. ஆதிமூலத்தேவர் செல்விதான் வாரிசு என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஆதிமூலத்தின் மகளின் மகள்தான் செல்வி ஆவார். தாவா சொத்திற்கு எந்த காலத்திலும் செல்வி பெயரில் ஆவணம் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் நஞ்சை விவசாயமும், புஞ்சை விவசாயம் பற்றியும் சொல்லவில்லை என்றால் சரிதான். கருவேலமரங்கள் உள்ளதாக சொல்லியுள்ளேன்.

4. தாவா சொத்துக்களை செல்விதான் அனுபவித்து வருவதாக ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. செல்விதான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று

எனக்கு தெரியும். வழக்கிற்காக செல்விதான் அனுபவம் செய்து வருகிறார் என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்தவர்கள் பள்ளிக்குடத்தான், சேங்கை என்பவர்கள் ஆவார்கள். சேங்கை என்பவர் எங்கள் குடும்ப சொத்தை நான் போர்ஜரியாக பட்டா மாற்றியதாக என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. பழையனூர் காவல்நிலைய குற்ற எண்.129/2020 என்ற வழக்கில் கணேசன் த.பெ.ராசு, கருப்பையா மகன் கோபால், அம்மாசி மகன் வம்பையன், ஆதிமூலம் மகன் அம்பலம், அம்மாசி மகன் ஈஸ்வரி, பள்ளிக்குடத்தான் மகன் தண்டிலிங்கம், அம்பலம் மகன் முத்துராமலிங்கம் ஆகியோர்கள் மீது போர்ஜரியாக பட்டா மாற்றியதாக வழக்கு உள்ளதா என்றால் இல்லை.

5. கருப்பையா மகன் கோபால் தாவா வழக்கின் வழக்கறிஞர் என்றால் சரியல்ல. நான், தாவா வழக்கறிஞர் போர்ஜரியாக பட்டா மாற்றியதாக வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. அதனால் தாவா வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கின் சொத்து விபரங்கள் எனக்கு தெரியாது என்றும், நான் தாவா வழக்கில் கோபால் வழக்கறிஞர் சொல்லி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.